## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-5

### கற்பார்

(விஜயங்களுக்கு அடியான விபவாவதார குணங்களை அநுஸந்தித்து,
'இந்த குணாநுபவத்தை இழக்கிறார்களே' என்று உலகத்தாரை
நோக்கி ஆழ்வார் இரங்குதல்)

3381 ***** கற்பார் இராமபிரானை அல்லால், மற்றும் கற்பரோ,
புற்பா முதலாப், புல்லெறும்பாதி ஒன்றின்றியே *
நற்பால் அயோத்தியில் வாழும், சராசரம் முற்றவும்,
நற்பாலுக்கு உய்த்தனன், நான்முகனார் பெற்ற நாட்டுளே (1)

3382 நாட்டில் பிறந்தவர், நாரணற்காளன்றி யாவரோ,
நாட்டில் பிறந்து, படாதனபட்டு மனிசர்க்கா *
நாட்டை நலியும் அரக்கரை, நாடித் தடிந்திட்டு,
நாட்டையளித்து உய்யச் செய்து, நடந்தமை கேட்டுமே (2)

3383 கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால், மற்றும் கேட்பரோ,
கேட்பார் செவிசுடு, கீழ்மை வசவுகளே வையும் *
சேட்பால் பழம்பகைவன், சிசுபாலன், திருவடி
தாட்பால் அடைந்த, தன்மை அறிவாரை அறிந்துமே (3)

3384 தன்மை அறிபவர் தாம், அவற்காளன்றி யாவரோ,
பன்மைப் படர்பொருள், ஆதுமில்பாழ் நெடுங்காலத்து *
நன்மைப் புனல்பண்ணி, நான்முகனைப் பண்ணி, தன்னுள்ளே
தொன்மை மயக்கிய, தோற்றிய சூழல்கள் சிந்தித்தே (4)

3385 சூழல்கள் சிந்திக்கில், மாயன் கழலன்றிச் சூழ்வரோ,
ஆழப் பெரும்புனல் தன்னுள், அழுந்திய ஞாலத்தை *
தாழப்படாமல், தன்பால் ஒருகோட்டிடைத்தான் கொண்ட,
கேழல் திருவுருவாயிற்றுக், கேட்டும் உணர்ந்துமே (5)

3386 கேட்டும் உணர்ந்தவர், கேசவற்காளன்றி யாவரோ,
வாட்டமிலா வண்கை, மாவலி வாதிக்க வாதிப்புண்டு *
ஈட்டங்கொள் தேவர்கள், சென்றிரந்தார்க்கு இடர்நீக்கிய,
கோட்டங்கை வாமனனாய்ச், செய்த கூத்துக்கள் கண்டுமே (6)

3387 கண்டும் தெளிந்தும் கற்றார், கண்ணற்காளன்றி யாவரோ,
வண்டுண் மலர்த்தொங்கல், மார்க்கண்டேயனுக்கு வாழுநாள் *
இண்டைச்சடைமுடி, ஈசனுடன்கொண்டு உசாச்செல்ல,
கொண்டங்குத் தன்னொடும் கொண்டு, உடன் சென்றதுணர்ந்துமே (7)

3388 செல்ல உணர்ந்தவர், செல்வன்தன் சீரன்றிக் கற்பரோ,
எல்லையில்லாத பெருந்தவத்தால், பலசெய்மிறை *
அல்லல் அமரரைச் செய்யும், இரணியன் ஆகத்தை,
மல்லல் அரியுருவாய்ச், செய்த மாயம் அறிந்துமே (8)

3389 மாயம் அறிபவர், மாயவற்காளன்றி யாவரோ,
தாயம்செறும் ஒருநூற்றுவர் மங்க, ஓரைவர்க்காய் *
தேசமறிய ஓர்சாரதியாய்ச் சென்று, சேனையை
நாசம் செய்திட்டு, நடந்த நல்வார்த்தை அறிந்துமே (9)

3390 * வார்த்தை அறிபவர், மாயவற்காளன்றி யாவரோ,
போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு, இறப்பிவை
பேர்த்து * பெருந்துன்பம் வேரற நீக்கித், தன்தாளின் கீழ்ச்
சேர்த்து, அவன்செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்றே (10)

3391 * தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு, இன்பக்கதி செய்யும்,
தெளிவுற்ற கண்ணனைத், தென்குருகூர்ச் சடகோபன் சொல் *
தெளிவுற்ற ஆயிரத்துள், இவை பத்தும் வல்லாரவர்,
தெளிவுற்ற சிந்தையர், பாமரு மூவுலகத்துள்ளே (11)

## மணவாள மாமுனிகள் அருளிச் செய்த
## திருவாய்மொழி நூற்றந்தாதி

65 * கற்றோர் கருதும், விசயங்களுக்கெல்லாம்,
பற்றாம் விபவகுணப், பண்புகளை * - உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை, வாய்ந்துரைத்த மாறன் சொல்,
பண்ணில் இனிதான, தமிழ்ப் பா